

சட்டப்பேரவையில்
மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு
நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான
விவாதத்திற்கு பதிலளித்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை.

**8. 2. 2013**

# உயரிய இலட்சியங்களை அடைய அயராது பாடுபட்டு வரும் மக்கள் நல அரசு!

சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு
நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான
விவாதத்திற்கு பதிலளித்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை – 8.2.2013


வெளியீடு :
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை .

சிறப்பு வெளியீடு எண்.20

# தமிழரசு

பிப்ரவரி 2013

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை .

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
110, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு
நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான
விவாதத்திற்கு பதிலளித்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

# **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

ஆற்றிய உரை – **8.2.2013**

---

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள் சக்தியை உந்து சக்தியாகக் கொண்டு, ‘‘மக்கள் சேவையே மகேசன் சேவை’’ என்கிற குறிக்கோளின் அடிப்படையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய பாதையில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கைகளை விளக்கி, பாரம்பரியம் மிக்க இந்த மாமன்றத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் கடந்த ஒன்றாம் தேதியன்று உரையாற்றினார்கள்.

மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின் மீது இந்த அவையில் கடந்த சில நாட்களாக விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்திலே கலந்து கொண்டு, எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்களும், ஆளும்கட்சி வரிசையில் இடம் பெற்றுள்ள மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களின் மேலான கருத்துகளை எடுத்து வைத்துள்ளனர். அனைவருக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது அரசின் வியத்தகு சாதனைகளையும், நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகளையும், மேற்கொள்ளவிருக்கும் மக்கள் நலப் பணிகளையும் கோடிட்டுக் காட்டும் விதமாக இந்த ஆளுநர் உரை அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த விவாதத்தின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், தங்களது அறிவார்ந்த கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நல்ல ஆலோசனைகளை அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். எங்களது அரசின் கொள்கைகளுக்கு, செயல்பாடுகளுக்குப் பாராட்டும், வரவேற்பும் தந்திருக்கிறார்கள். அதே சமயத்தில், இந்த அவையிலே கண்டனக் கணைகளைத் தொடுத்தவர்களும், வசைமாரி பொழிந்தவர்களும் உண்டு.

வசைபாடுபவர்களை நினைக்கும் போது, எனக்கு ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது நண்பர்களோடு காரில் சென்று கொண்டிருந்தார். ஓர் ஊரில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் பேசிய அந்தப் பேச்சாளர், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எதிராக கண்டனக் கணைகளைத் தொடுத்துக் கொண்டிருந்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஓர் ஓரத்தில் காரை நிறுத்தச் சொல்லி அந்தப் பேச்சு முழுவதையும் கேட்டுவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

காரில் இருந்த நண்பர் ஒருவர் பேரறிஞர் அண்ணாவிடம், "ஏன் அண்ணா அவர் உங்களை வசைபாடுகிறார்?" என்று கேட்டார். அண்ணா அவர்கள் பதில் ஏதும் சொல்லாமல் மவுனம் காத்தார். சிறிது தூரம் சென்றவுடன் ஒரு மாட்டு வண்டியை பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்று கொண்டிருந்த கார் முந்திச் செல்ல வேண்டியிருந்தது. எனவே, சாலை ஓரமாக காரை செலுத்தி, மாட்டு வண்டியைக் கடந்து கார் சென்றது. அப்போது, அந்த மாட்டு வண்டியை ஓட்டியவர் காரின் ஓட்டுநரைப் பார்த்து

வசைபாடினார். அப்போது, காருக்குள் இருந்த நண்பர்களிடம், ‘‘பார்த்தீர்களா ? கார் வேகமாகப் போகிறது. மாட்டு வண்டியால் இதற்கு ஈடாக வர முடியவில்லை. அந்தக் கோபம் தான் அவர் நம்மைத் திட்டுகிறார். அவருக்குச் சமமாக நாம் வசைபாடாமல் நம் வேகத்தை அதிகரித்து, போக வேண்டிய இடத்தை அடைய வேண்டும். இந்த மாட்டு வண்டிக்காரர் நிலைமையில் தான் அந்தப் பேச்சாளர் இருக்கிறார்’’ என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா.

‘‘நம் வளர்ச்சி அவரைக் கவர்ந்திருக்க வேண்டும். அதனால் தான் அவர் நம்மை கவனிக்கிறார். நம்மையொத்து வளர முடியவில்லை. அந்த இயலாமை நம் மேல் கோபமாக மாறுகிறது. கோபம், கடுஞ்சொல் பேச வைக்கிறது. இந்த அடிப்படைக் காரணத்தை அறிந்தால், அவர் மேல் இரக்கம் உண்டாகும். நமது வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் முக்கிய அளவுகோல் பிறரது நியாயமற்ற வசை’’ என்றார் பேரறிஞர் அண்ணா.

எங்களைப் பொறுத்த வரையில், ‘‘பிறர் ஏசும் ஏச்சை உரமாக்கிக் கொண்டு வளர வேண்டும்’’ என்ற பேரறிஞர் அண்ணாவின் அமுதமொழிக்கு ஏற்ப நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

மக்கள் நலன் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆளுநர் உரை உருவாக்கப்பட்டுள்ளதால், பலரால் பாராட்டப்படுகிற நல்வாய்ப்பினை இது பெற்று இருக்கிறது. இருப்பினும், திட்டங்களை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தும் வகையிலும், திட்டங்களின் பயன் மக்களைச் சென்றடையும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியுள்ள ஆக்கப்பூர்வமான அறிவுரைகளும், ஆலோசனைகளும் கட்சிப் பாகுபாடின்றி இந்த அரசால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கடந்த 20 மாதங்களில் தமிழக மக்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட நலத் திட்டங்கள் குறித்தும், அரசு நிகழ்த்தியுள்ள சாதனைகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும், அரசின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் குறித்தும் எனது விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழகத்தில் நிலவும் மின்சாரப் பிரச்சினை குறித்து எடுத்துக் கூறினார்கள். தமிழகத்தில் தற்போது நிலவும் மின்சாரப் பற்றாக்குறைக்கான காரணம் என்ன என்பதைப் பற்றியும், அவற்றைச் சீர் செய்வதற்கு நான் எடுத்து வரும் முயற்சிகளைப் பற்றியும் இந்த அவையிலே பல முறை விரிவாக எடுத்துரைத்துள்ளேன்.

இருப்பினும், தற்போது நிலவும் மின்சாரப் பற்றாக்குறைக்குக் காரணம் எனது அரசு தான் என்று இங்கே பேசிய ஒரு சில உறுப்பினர்கள் கூறுவதால், இதில் உள்ள உண்மை நிலையை மீண்டும் எடுத்துக் கூறுவது எனது கடமையென கருதுகிறேன்.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2001 முதல் 2006 வரை தமிழகம் மின் மிகை மாநிலமாகத்தான் இருந்து வந்தது. எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு, 500 மெகாவாட் மின் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை வட சென்னையில் அமைக்கவும்; தேசிய அனல் மின் கழகத்துடன் இணைந்து 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களை வல்லூரில் அமைக்கவும்; நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களை தூத்துக்குடியில் அமைக்கவும்; 500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையத்தை அமைக்கவும்; ராமநாதபுரம்

மாவட்டம் வழுதூரில் 95 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் நிலையத்தை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது, 3,095 மெகாவாட் அளவுக்கான மின்சார உற்பத்தித் திட்டங்கள் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டன. இந்த மின் திட்டங்களை 2006 முதல் 2011 வரையிலான ஆண்டுகளில், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நிறைவேற்றியிருந்தாலே, தமிழ்நாட்டில் தற்போது மின் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்காது. எனவே, தற்போது நிலவும் மின் பற்றாக்குறைக்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு தான் காரணம் என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2011–ல், 3ஆவது முறையாக நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், தமிழகத்தின் மின் நிலைமை குறித்து விரிவாக ஆய்வு நடத்தினேன். அப்போது, 2005ஆம் ஆண்டு எனது ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட, வட சென்னை அனல் மின் நிலையத் திட்டத்தில் 50 விழுக்காட்டிற்கும் குறைவானப் பணிகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான பணிகளை நான் துரிதப்படுத்தியதன் விளைவாக, 600 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நமக்கு கிடைக்க இருக்கிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்து ஆண்டுகளில் 50 விழுக்காட்டிற்கும் குறைவான பணிகளே முடிக்கப்பட்ட நிலையில், இந்த 1 $^{3}/_{4}$ ஆண்டுகளில் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட பணிகளை எனது அரசு செய்து முடித்துள்ளது.

வட சென்னை அனல் மின் நிலையத்தின் இரண்டாவது அலகினைப் பொறுத்த வரையில், 40 விழுக்காடு பணிகள் மட்டுமே முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டுகளில் முடிவடைந்திருந்தன. நான் ஆட்சிப்

பொறுப்பேற்ற பிறகு, தொய்வடைந்திருந்த இந்தப் பணிகளை முடுக்கிவிட்டதன் காரணமாக மீதமுள்ள 60 விழுக்காடு பணிகள் தற்போது முடிவடையும் நிலையில் உள்ளன. இதன் மூலம், இந்த ஆண்டு மே மாதம் முதல் நமக்கு 600 மெகாவாட் மின்சாரம் கிடைக்க இருக்கிறது.

இதே போன்று, 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டப் பணிகள் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தின் ஐந்து ஆண்டுகளில் 55 விழுக்காடு பணிகளே முடிவடைந்திருந்தன. நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்தப் பணிகளை விரைவுபடுத்தியதன் காரணமாக, மீதமுள்ள 45 விழுக்காடு பணிகள் 1½ ஆண்டுகளில் முடிக்கப்பட்டன. இந்த அனல் மின் நிலையத்திலிருந்து, டிசம்பர் மாதம் 2012 ஆம் ஆண்டு முதல் நமக்கு மின்சாரம் கிடைக்கும் என்று நான் ஏற்கெனவே இந்த அவையிலே அறிவித்திருந்தேன். அதன்படி, இந்த அனல் மின் நிலையம் 608 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து சோதனை ஓட்டத்தைத் தொடங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய அனல் மின் கழகத்துடன் கூட்டு முயற்சியில் எனது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வல்லூர் அனல் மின் திட்டப் பணிகளும், முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மந்த கதியிலேயே நடைபெற்றன. நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாக, இந்தப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டன. இதன் விளைவாக, நான் ஏற்கெனவே இந்த அவையில் அறிவித்தது போல், வல்லூர் அனல் மின் திட்டத்தின் முதல் அலகு 2012 டிசம்பர் மாதம் முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இதிலிருந்து தமிழ்நாட்டிற்கு 375 மெகாவாட் மின்சாரம் தற்போது கிடைத்து வருகிறது. இதே போன்று நான் ஏற்கெனவே அறிவித்தபடி, 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு

இந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்தும்; 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டத்தின் மூன்றாவது அலகு இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்தும் செயல்பாட்டிற்கு வர இருக்கிறது. இவற்றிலிருந்து தமிழ்நாட்டிற்கு 750 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் எனது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தூத்துக்குடி அனல் மின் திட்டப் பணிகளும், முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆமை வேகத்திலேயே சென்றன. இந்தப் பணிகளை நான் துரிதப்படுத்தியதன் விளைவாக, தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் இரண்டு அலகுகள் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் உற்பத்தியைத் துவங்க உள்ளன. இதன் மூலம், 387 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைக்கும்.

நான் மேலே சொன்ன அனல் மின் திட்டங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய 3,312 மெகாவாட் மின்சாரத்தில், 375 மெகாவாட் மின்சாரத்தை நாம் தற்போது பெற்று வருகிறோம். மீதமுள்ள 2,937 மொகாவாட் மின்சாரத்தில், இந்த ஆண்டு ஜுன் மாதத்திற்குள் 2,175 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்க இருக்கிறது. எஞ்சியுள்ள, 762 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு இறுதிக்குள் கிடைத்துவிடும்.

மேலும், கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்தும்; நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாவது கட்ட விரிவாக்கத் திட்டத்திலிருந்தும் மின்சாரம் நமக்கு கிடைக்கும்.

இது மட்டுமல்லாமல், இந்த ஆண்டு, ஜுன் மாதத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் உள்ள தனியார் மின் நிலையங்களிலிருந்து, 900 மெகாவாட் மின்சாரமும்; மூன்று ஆண்டு கால ஒப்பந்த அடிப்படையில் வெளி மாநிலங்களிலிருந்து 500 மெகாவாட் மின்சாரமும் பெற்றிட ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

தற்போது எடுக்கப்பட்டு வரும் போர்க்கால நடவடிக்கையின் காரணமாக, தற்போது தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை கணிசமான அளவு குறைந்து இருக்கிறது. ஜூன் மாதத்திலிருந்து மின் பற்றாக்குறை மேலும் குறைந்து, இந்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதுமாக நீக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையில் மின் பற்றாக்குறையைத் தீர்ப்பது பற்றி எவ்வித உறுதிமொழியும் அளிக்கப்படவில்லை என கருத்துத் தெரிவித்தவர்கள் இந்த பதிலின் மூலம் திருப்தி அடைவார்கள் என நான் கருதுகிறேன்.

எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கத் திட்டம்; 1,320 (2 x 660) மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் நிலையத் திட்டம்; 1,320 (2 x 660) மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையத் திட்டம் போன்ற புதிய மின் திட்டங்களுக்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் மார்ச் மாதம் கோரப்படும். இது மட்டுமல்லாமல், 3,000 மெகாவாட் சூரிய மின் சக்தி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இன்னும் சொல்லப் போனால், தமிழ்நாட்டின் மொத்த மின் நிறுவு திறனில் கிட்டத்தட்ட 30 விழுக்காடு மின் நிறுவு திறன் எனது ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. 1991 முதல் 1996 வரையிலான எனது முதல் ஆட்சிக் காலத்தில் 1,330 மொகாவாட் அளவுக்கும்; 2001 முதல் 2006 வரையிலான எனது 2ஆவது ஆட்சிக் காலத்தில் 2,518 மெகாவாட் அளவுக்கும் கூடுதலாக மின் நிறுவு திறன் சேர்க்கப்பட்டது. அதே சமயத்தில், 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெறும் 520 மெகாவாட் அளவுக்கும்; 2006 முதல் 2011 வரையிலான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக்

காலத்தில் வெறும் **206** மெகாவாட் அளவுக்கும் மட்டுமே கூடுதலாக மின்நிறுவு திறன் சேர்க்கப்பட்டுள்ளது.

உண்மை நிலை இவ்வாறிருக்க, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் **11,700** கோடி ரூபாய் அளவுக்கு மின் திட்டங்களுக்கு செலவிடப்பட்டதாகவும்; எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் வெறும் **700** கோடி ரூபாய்க்கு மட்டுமே மின் திட்டங்களுக்காக செலவிடப்பட்டதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் பொதுக்கூட்டம் ஒன்றில் தெரிவித்து இருந்தார்.

உண்மை நிலை என்னவென்றால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு மின்சார வாரியம் **35,000** கோடி ரூபாய் அளவுக்கு பல வழிகளில் கடன் பெற்று, அதில் **7,858** கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே மின் திட்டங்களுக்கு செலவழித்துள்ளது. மீதியுள்ள தொகை வெளி மாநிலங்களிலிருந்து மின் கொள்முதல் செய்வதற்காகவும், கடனைத்திருப்பிச்செலுத்துவதற்காகவும்செலவழிக்கப்பட்டது. ஆனால், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் **3,654** கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே கடன் பெறப்பட்டு; **907** கோடி ரூபாய் அளவுக்கு மின் திட்டங்களுக்காக செலவழிக்கப்பட்டது. இது மட்டுமல்லாமல், **2001** ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது, மின்சார வாரியமே திவாலாகும் சூழ்நிலையில் இருந்தது என்பதையும், இதை சரி செய்வதற்கும், தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு முந்தைய தி.மு.க. அரசு நிலுவையில் வைத்திருந்த பாக்கித் தொகைகளைத் திரும்பச் செலுத்துவதற்குமே பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை எனது அரசு அப்போது செலவழித்தது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் எனது ஆட்சிக் காலத்திலேயே, **2,500** மெகாவாட் அளவுக்கு மின் திட்டங்கள் துவக்கப்பட்டிருந்ததால், **7,000** கோடி ரூபாய் அளவுக்கு மின் திட்டங்களுக்கு

செலவழிக்க வேண்டிய நிலை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசுக்கு ஏற்பட்டது என்பதையும்; அதே சமயத்தில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்டது போல், 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்த ஒரு மின் திட்டமும் துவக்கப்படவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற போதும், தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் சுமையில் சிக்கித் தவித்தது. 31.3.2011 நிலவரப்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் குவிந்த இழப்பு 40,000 கோடி ரூபாயையும்; வங்கி மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் 44,000 கோடி ரூபாயையும் தாண்டியிருந்தது. இது தவிர, தனியார் மின் உற்பத்தியாளர் மற்றும் இதர ஒப்பந்ததாரர்களுக்கான நிலுவைத் தொகை 5,000 கோடி ரூபாய் அளவுக்கு இருந்தது.

இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில், கடந்த 20 மாத காலத்தில் 3,000 கோடி ரூபாய்க்கு மேல் மின் திட்டங்களுக்காக செலவழிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 3,000 மெகாவாட் அளவுக்கு நமக்கு மின்சாரம் கிடைக்க இருக்கிறது என்பதையும் இந்தத் தருணத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சட்டம் ஒழுங்கைப் பொறுத்த வரையில் சமூக விரோதிகளின் ஆட்சி என்ற நிலை மாறி சட்டத்தின் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு நண்பனாகவும், சமூக விரோதிகளுக்கு சிம்ம சொப்பனமாகவும் காவல் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது. சில சமூக விரோதிகளின் கையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த காவல் துறை, கடந்த 20 மாதங்களாக சுதந்திரமாக செயல்பட்டு வருகிறது. கொலை, கொள்ளை மற்றும் சமுதாயக் குற்றங்களில் ஈடுபடுவோர், ஆட்களைக் கடத்தி பணம் பறிப்போர், மணல் மற்றும் ரேஷன்

அரிசி கடத்துவோர், கட்டப் பஞ்சாயத்துகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2012 ஆம் ஆண்டு 2,173 நபர்கள் பல்வேறு தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, மாநிலத்தில் 1,366 கொலை வழக்குகளும், 74 ஆதாயக் கொலை வழக்குகளும், 437 கொள்ளை வழக்குகளும், 3,738 கன்னக்களவு வழக்குகளும் தாக்கலாகியிருந்தன. ஆனால், கடந்த திமுக ஆட்சியின் இறுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு 1,715 கொலை வழக்குகளும், 153 ஆதாயக் கொலை வழக்குகளும், 1,817 கொள்ளை வழக்குகளும், 4,715 கன்னக்களவு வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. இந்த 5 ஆண்டு காலத்தில், திமுக ஆட்சியில் கொலை வழக்குகள் 25.5 சதவீதமும், ஆதாயக் கொலை 106.75 சதவீதமும், கொள்ளைகள் 315.8 சதவீதமும், கன்னக்களவு 26 சதவீதமும் அதிகரித்துள்ளது. அதாவது, கொலைகள் ஆண்டொன்றுக்கு சராசரியாக 5.1 சதவீதம் கூடியுள்ளன. ஆதாயக் கொலைகள் சராசரியாக 21.4 சதவீதம் கூடியுள்ளன. கொள்ளைகள் சராசரியாக 63 சதவீதம் கூடியுள்ளன. கன்னக்களவு வழக்குகள் ஆண்டொன்றுக்கு சராசரியாக 5.2 சதவீதம் கூடியுள்ளன.

திமுக ஆட்சியில் கொலைகளின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு 5.1 சதவீதம் கூடியுள்ளது. ஆனால் 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2012–ல் கொலைகளின் எண்ணிக்கை 3.37 சதவீதம் தான் உயர்ந்துள்ளது. கொலைகள் பொதுவாக, தனிப்பட்ட முன் விரோதம், சொத்துப் பிரச்சினை, அல்லது திடீர் கோபத்தினால் நடக்கும் தாக்குதல்களின் விளைவாக நிகழ்கின்றன. இவற்றை முற்றிலும் தடுப்பதென்பது இயலாத காரியம். மக்கள் தொகை கூடுதலுக்கேற்ப

கொலைகளின் எண்ணிக்கை சற்று உயர்ந்து கொண்டு இருக்கும். இருந்த போதிலும், திமுக ஆட்சியுடன் ஒப்பிடும் போது கடந்த ஆண்டில் கொலைகளின் அதிகரிப்பு 2 சதவீதம் குறைவாக உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன்.

காவல் துறையின் நடவடிக்கைகளால் ஓரளவு கட்டுப்படுத்தக் கூடியவை ஆதாயக் கொலைகள் ஆகும். 2010ஆம் ஆண்டு ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை 153ஆக இருந்தது. இது 2012ஆம் ஆண்டு 137ஆக குறைந்துள்ளது. ஆனால், கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியின் போது ஆண்டிற்கு சராசரி 21.4 சதவீதம் ஆதாயக் கொலைகள் கூடியுள்ளன என்பதுதான் உண்மை.

2010ஆம் ஆண்டு 4,715 கன்னக்களவு வழக்குகள் தாக்கலாகியுள்ளன. ஆனால் 2012ஆம் ஆண்டு, 4,457 கன்னக்களவு வழக்குகள் தாக்கலாகியுள்ளன. 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2012ஆம் ஆண்டு இது 5.8 சதவீதம் குறைந்துள்ளது. அதாவது, ஒரு வருடத்திற்கு 2.9 சதவீதம் குறைந்துள்ளது. ஆனால், திமுக ஆட்சியில் கன்னக்களவு வழக்குகள் சராசரியாக ஆண்டுதோறும் 5.1 சதவீதம் அதிகரித்துள்ளன.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி, நமது மாநிலத்தில் 2011ஆம் ஆண்டு தாக்கலான குற்றங்களை மற்ற மாநிலங்களில் தாக்கலான குற்றங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் தாக்கலான குற்றங்களின் எண்ணிக்கை மற்றும் குற்றவிகிதம் குறைவாக உள்ளது தெரியவரும். உதாரணத்திற்கு, 2011ஆம் ஆண்டு கொலை வழக்குகள் ஆந்திராவில் 2,808ஆம், பீகாரில் 3,198–ம், மகாராஷ்டிராவில் 2,818–ம், மத்திய பிரதேசத்தில் 2,511–ம், மேற்கு வங்கத்தில் 2,109–ம் மற்றும் உத்திரப் பிரதேச மாநிலத்தில் 4,951–ம், தாக்கலாகியுள்ளன.

ஆனால், தமிழ்நாட்டில் **1,877** கொலை வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன.

பொதுவாக, குற்ற நிகழ்வுகளை ஒப்பிடும் போது குற்ற விகிதம் என்ற எண்ணிக்கை பயன்படுத்தப்படுகிறது. இது, **1** இலட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்பதன் குறியீடு ஆகும். **2011**ஆம் ஆண்டு மாநில குற்ற விகிதம் **267.4** ஆகும். ஆனால், இது கேரளாவில் **515.6** ஆகவும், புதுச்சேரியில் **350.6** ஆகவும், புது டெல்லியில் **318.5** ஆகவும், மத்தியப் பிரதேச மாநிலத்தில் **299** ஆகவும் உள்ளது.

காவல் துறையினர் குற்ற வழக்குகளில் திறமையாகப் புலன் விசாரணை செய்து, பல முக்கிய கொலை, கொள்ளை வழக்குகளில் எதிரிகளைக் கைது செய்து, களவு போன பொருட்களை மீட்டு வருவதுடன்; தொடர்ந்து குற்றம் புரியும் குற்றவாளிகளைத் தடுப்புக் காவலில் வைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த **2012**ஆம் ஆண்டு, **2,173** நபர்கள் பல்வேறு தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். காவல்துறையினர் குற்றவாளிகளைக் கைது செய்து களவு போன சொத்துக்களை மீட்பதுடன்; குற்றவாளிகள் மீண்டும் பிணையில் வெளிவந்து குற்றங்களில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளையும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள் என்பதே உண்மை.

குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மற்றும் சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகள் குறித்தும் மாநில உளவுத் துறையினர் முன்கூட்டியே அளிக்கும் தகவல்களின் அடிப்படையில், குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை மாவட்டக் காவல்துறையினர் கைது செய்து வருவதுடன், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழ வாய்ப்புள்ள இடங்களில், காவல் துறையினர் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து அமைதிக் குழுக்களை ஏற்படுத்தி, பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி, காரணங்களைக் கண்டறிந்து, பிரச்சனைகளைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

காவல் துறையினரின் திறமையை மேலும் பலப்படுத்தும் வகையில், காவல்துறையிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய பணியிடங்களைத் தோற்றுவித்தும், காவல் பணிகளுக்குத் தேவையான வாகன வசதி மற்றும் அதி நவீனக் கருவிகள் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து தந்தும், காவல்துறையை ஒரு ஆற்றல் மிக்க துறையாக மாற்ற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுத்து வருகிறேன்.

சட்டம் – ஒழுங்குப் பராமரிப்பு குறித்த உண்மையான அளவுகோல் மாநிலத்தில் சட்டத்தின் ஆட்சி எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் பொறுத்தும்; பொதுமக்களிடையே தனி மனிதப் பாதுகாப்பு மற்றும் தங்களது சொத்துக்கள் மற்றும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு எவ்வாறு உள்ளது என்பதைப் பொறுத்தும்; மற்றும் சட்டத்தை அமல்படுத்தும் காவல்துறையினரின் சுதந்திரமான செயல்பாட்டைப் பொறுத்தும் மட்டுமே அமையும். ஆங்காங்கு நடைபெறும் ஒரு சில குற்ற நிகழ்வுகளை வைத்து, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமையை மதிப்பீடு செய்வது என்பது சரியான அணுகுமுறை அல்ல.

நான் அவ்வப்போது அளித்து வரும் அறிவுரைகளின் பேரிலும், ஊக்கத்தின் பேரிலும், காவல் துறையினர் சிறப்பாகச் செயல்பட்டு மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரித்து வருவதோடு; குற்றத் தடுப்பு மற்றும் குற்றங்களைக் கண்டுபிடித்தல் போன்றவற்றிலும் முழு ஈடுபாட்டுடன்

செயல்பட்டு வருகின்றனர். கடந்த 20 மாதங்களாக மக்களைப் பாதிக்கும் வகையில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏதுமின்றி, தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிடும் போது, பயங்கரவாத மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளும்; இடதுசாரி தீவிரவாத செயல்களும்; தமிழகத்தில் வேரூன்றா வண்ணம் தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

எனவே, மாநிலத்தில் குற்றங்கள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன என்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், நிலம் மற்றும் கட்டட உரிமையாளர்கள் சமூக விரோதக் கும்பல்களால் மிரட்டப்பட்டனர். அவர்களது சொத்துக்கள் அடிமாட்டு விலைக்கு சமூக விரோதக் கும்பல்களால் வாங்கப்பட்டன. போலி ஆவணங்கள் தயார் செய்து, அடாவடிச் செயல்கள் மூலமும் நிலங்கள் பறிக்கப்பட்டன. மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், இதற்கென காவல் துறையில் நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவுகளை ஏற்படுத்தினேன். இந்தப் பிரிவுகள், நில அபகரிப்பாளர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுத்து வருகின்றன.

நில அபகரிப்பு தொடர்பாக, 28.1.2013 வரை பொது மக்களிடமிருந்து 53,777 புகார்கள் பெறப்பட்டுள்ளன. இவை குறித்து 1,673 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,943 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்குகளில் இதுவரை 1,137 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 2,711 ஏக்கர் நிலமும் மற்றும் 10,07,448 சதுர அடி வீட்டு மனைகளும் அபகரிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில், காவல் துறைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும்செய்துகொடுத்து,தக்க அறிவுரைகளைவழங்கி, குற்றங்கள் நிகழா வண்ணம் தடுப்பதிலும்; பொதுமக்களின் நலன்களைக் காப்பதிலும்; பொது அமைதியைப் பேணிக் காப்பதிலும் நான் தனிக் கவனமும், அக்கறையும் செலுத்தி வருகிறேன் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த ஆளுநர் உரையிலே புதுத் திட்டங்கள் எதுவும் இல்லை என்று சில உறுப்பினர்கள் குறைபட்டுக் கொண்டுள்ளனர். நான் அவர்களுக்கு ஒன்றினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான வாக்குறுதிகள், திட்டங்களாக இதற்கு முன்னர் இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு ஆளுநர் உரைகளில் இடம் பெற்றிருந்தன. அந்தத் திட்டங்களின் சாதனைகள், அவற்றின் மூலம் மக்கள் அடைந்துள்ள பயன்கள் போன்றவை இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டப்பட்டு இருக்கின்றன. இதுவன்றி, இந்த அரசு தொடர்ந்து கடைபிடிக்க உள்ள கொள்கைகளும் குறிப்பிடப்பட்டு உள்ளன.

முதன்மைத் துறையில், பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஐந்து விழுக்காடு வளர்ச்சியை எய்துதல்; கூட்டுறவுச் சங்கங்கள் வலிமையான ஜனநாயக அமைப்புகளாக செயல்படும் வகையில் தேர்தல் நடத்துதல்; புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான நிலம் கிடைப்பது பற்றிய கொள்கை; நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்கள் செயல்படுத்துவதற்கான கொள்கை என பல்வேறு கொள்கை முடிவுகள் இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன என்பதையும்; இதற்கான

திட்டங்களும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன என்பதையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்த ஆளுநர் உரையில் எந்த வித கொள்கை முடிவுகளும் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது.

2011ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலின் போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையிலே 177 வாக்குறுதிகள் மக்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன.

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணிக்கும் வகையில், தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை என்னும் புதுத் துறை உருவாக்கப்பட்டது.

வாக்குறுதிகளாக தரப்பட்ட 177 சிறப்புத் திட்டங்களில், 140 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 21 திட்டங்களுக்கான ஆயத்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 16 திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் தொழிற் புரட்சியை உருவாக்கும் வகையில், 5.11.2012 அன்று ஒரே நாளில் நான்கு FORTUNE 500 நிறுவனங்கள் உட்பட 12 நிறுவனங்களுடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இந்த நிறுவனங்கள், 20,925 கோடி ரூபாயைத் தமிழகத்தில் முதலீடு செய்ய உள்ளன. இதன் மூலம், 1,36,855 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக் கிடைக்கும். இதே போன்று, 14.5.2012 அன்று ஐந்து நிறுவனங்களுடன் தமிழக அரசு புரிந்துணர்வு

ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிறுவனங்கள் 5,700 கோடி ரூபாய்க்கு மேல் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய இருக்கின்றன. இதன் மூலம், சுமார் 9,500 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும். மொத்தத்தில், மேற்படி 17 நிறுவனங்கள் 26,625 கோடி ரூபாயைத் தமிழகத்தில் முதலீடு செய்ய உள்ளன. இதன் மூலம் 1,46,355 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக் கிடைக்கும். தொழில் துறையில், தொலைநோக்குத் திட்டம் 2023–ல் குறிப்பிட்டுள்ள குறிக்கோளினை அடையும் வண்ணம், உரிய நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அரசு வேலைவாய்ப்பை பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்தேர்வாணையம்மற்றும்வேலைவாய்ப்பகங்கள்மூலம் அரசுத் துறைகளில் 54,420 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம், 13,376 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்கள் மற்றும் 205 உதவி ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. பள்ளி மற்றும் கல்லூரிகளில் 64,435 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களும்; 16,793 சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களும்; 11,803 அங்கன்வாடி பணியாளர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

அரசு சார்பு நிறுவனங்கள் என்று எடுத்துக் கொண்டால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 16,963 பணியிடங்களும்; கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் 6,307 பணியிடங்களும்; தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 5,489 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. மொத்தத்தில் கடந்த 20 மாதங்களில், கிட்டத்தட்ட 2 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி இருக்கிறோம்.

மேலும், 22,269 ஆசிரியர் பணியிடங்களும், 1,091 காவல் உதவி ஆய்வாளர் பணியிடங்களும், அரசுத் துறைகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்கு 10,105 பணியிடங்களும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 4,042 பணியிடங்களும், கூட்டுறவு வங்கிகளில் 3,607 பணியிடங்களும் நிரப்பப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் விலைவாசி உயர்வைப் பற்றி பேசினார்கள். அதிகரித்துக் கொண்டே வரும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதில் மாநில அரசுக்கு ஓரளவு பங்கு உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், பெரும்பாலும் மத்திய அரசு எடுக்கும் கொள்கை முடிவுகளை சார்ந்தே பொருட்களின் விலை ஏறுகிறது. தற்போது ஏறிக்கொண்டே வரும் விலைவாசி உயர்விற்கு மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைதான் முக்கியக் காரணம் என்பதை இந்தத் தருணத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக, மத்திய அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பெட்ரோல், டீசல் விலை உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்விற்கு அடித்தளமாக விளங்குகிறது. அண்மையில், டீசல் விலையை நிர்ணயம் செய்யும் உரிமையை எண்ணெய் நிறுவனங்களுக்கே வழங்கி மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. டீசல் விலை உயர்வு காரணமாக, வாகனக் கட்டணம் தொடர்ந்து ஏறுமுகமாகவே இருந்து கொண்டு வருகிறது. இதன் விளைவாக, பொருட்களின் விலையும் ஏறிக் கொண்டே இருக்கிறது. பெட்ரோல், டீசல் விலைக் கொள்கையில், மத்திய அரசு மாற்றம் கொண்டு வந்து அதனைக் கட்டுப்படுத்தினால் மட்டுமே விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த முடியும்.

தற்போது, சர்வதேச பெட்ரோல் மற்றும் டீசல் விலைக்கேற்ப இந்தியாவின் பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த முறை தவறானது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம் நாட்டிற்குத் தேவையான கச்சா எண்ணெயில், கிட்டத்தட்ட 25 விழுக்காடு கச்சா எண்ணெய் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள 75 விழுக்காடு கச்சா எண்ணெய்தான் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இவ்வாறு கிடைக்கப்படும் கச்சா எண்ணெயைச் சுத்திகரித்து, பெட்ரோல் மற்றும் டீசலாக எண்ணெய் நிறுவனங்கள் விற்கின்றன. ஆனால், இதன் அடிப்படையில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயிக்கப்படவில்லை. தற்போதைய டீசல் இறக்குமதி சமநிலை விலை, அதாவது Import Parity Price என்னவாக இருக்கும் என்பதையும்; ஏற்றுமதி சமநிலை விலை, அதாவது Export Parity Price என்னவாக இருக்கும் என்பதையும் கணக்கிட்டு; இந்த இரண்டுக்குமான குறிப்பிட்ட சதவிகித அடிப்படையில், தொழில் சமநிலை விலை, அதாவது Trade Parity Price கணக்கிடப்பட்டு; அதன் அடிப்படையில், இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயிக்கப்படுகிறது. எனவேதான், அதற்குக் குறைவாக விற்கப்படும் விலையை நஷ்டம் என்று சொல்லாமல், குறை பலன், அதாவது under recovery என்று கூறுகின்றனர். இந்த முறையை ரத்து செய்துவிட்டு, இந்தியாவில் கச்சா எண்ணெயை எடுப்பதற்கு ஆகும் செலவு; அதை டீசலாகவும், பெட்ரோலாகவும் சுத்திகரிக்க ஆகும் செலவு; வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அதை சுத்திகரிக்க ஆகும் செலவு; நிலையான அன்னியச் செலாவணி மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை நிர்ணயம் செய்தால், குறைவான விலையில் பெட்ரோல் மற்றும் டீசல் மக்களுக்குக் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், அத்தியாவசியப்

பொருட்களின் விலையும் கட்டுக்குள் இருக்கும். எனவே, தற்போது ஏறிக் கொண்டே வரும் விலைவாசி உயர்விற்குக் காரணம் மத்திய அரசின் தவறான கொள்கைதான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு வாரத்திற்கு முன்பு கூட டீசல் விலை மாதம் 50 பைசா வீதம் உயர்த்தப்படும் என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தெரிவித்து இருக்கிறார். இதற்குக் காரணம், எண்ணெய் நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குவதுதான் என்றும் கூறியிருக்கிறார். எண்ணெய் நிறுவனங்களின் ஆண்டு நிதிக் கணக்குகளைப் பார்த்தாலே, இவை அனைத்தும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் லாபத்தில் இயங்கி வருகின்றன என்பது தெரிய வரும். இதனுடைய பங்குகளும் நல்ல விலையில் தான் இருக்கின்றன.

உண்மை நிலை இவ்வாறிருக்க, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய், ஆகியவற்றின் விலையை மத்திய அரசு உயர்த்திக் கொண்டே இருக்கிறது. இதில் உள்ள மற்றுமொரு அநியாயம் என்னவென்றால், மொத்தமாக டீசல் வாங்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான டீசல் விலை 11 ரூபாய் 81 காசு அளவிற்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதாவது, லாப நோக்கமின்றி, சேவை மனப்பான்மையுடன் செயல்படும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான டீசல் விலையை ஒரேயடியாக 11 ரூபாய் 81 காசு என்று மத்திய அரசு உயர்த்தியிருப்பதில் என்ன நியாயம்? எண்ணெய் நிறுவனங்கள் டீசலுக்கான விலையை சந்தை நிலவரப்படி நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற முடிவு தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியின் மகனும், மத்திய அமைச்சருமான திரு. மு.க. அழகிரி உறுப்பினராக இருக்கும் அரசியல் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இந்த டீசல் விலை உயர்வுக்கான முடிவை எடுத்த அரசியல்

விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், தனது எதிர்ப்பைத் தி.மு.க. தெரிவிக்காமல் டீசல் விலை உயர்ந்த பிறகு, இந்த உயர்வை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஒப்புக்கு ஓர் அறிக்கையை வெளியிட்டார் திரு. கருணாநிதி.

தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசின் இந்த இரட்டை டீசல் விலைக் கொள்கை காரணமாக 1,000 கோடி ரூபாய் அளவுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு, சில்லரை விலையில் பெட்ரோல் பங்குகளில் அரசுப் பேருந்துகளுக்கு டீசல் நிரப்பப்படுகிறது. இதிலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 1 லிட்டர் டீசலுக்கு கூடுதலாக கிட்டத்தட்ட 1 ரூபாய் செலுத்த வேண்டி உள்ளது.

ஆனால், மத்திய அமைச்சர் திரு. வீரப்ப மொய்லி அவர்கள் அண்மையில் விடுத்த அறிக்கையில், மொத்தமாக டீசல் கொள்முதல் செய்பவர்களுக்கு மானியம் அளிக்காததன் நோக்கம், இவைகள் வியாபார நோக்குடன் செயல்படும் நிறுவனங்கள் என்றும்; சந்தை விலையைத் தாங்கக்கூடிய வலிமை அவைகளிடம் உள்ளது என்றும்; இல்லையென்றாலும், அந்தச் சுமையை வாடிக்கையாளர் மீது சுமத்திவிடலாம் என்றும் கூறியிருக்கிறார். அதாவது, பேருந்துக் கட்டணங்களை உயர்த்த வேண்டும் என்று கூறியுள்ளார் மத்திய அமைச்சர் வீரப்ப மொய்லி அவர்கள்.

வேளாண் உற்பத்தி செய்யப் பயன்படும் இடு பொருட்களின் விலையை அடிப்படையாகக் கொண்டே, விளை பொருட்களின் கொள்முதல் விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்கிறது. மத்திய அரசின் தவறான உர மானியக் கொள்கை காரணமாக, இடு பொருட்களின்

விலை வெகுவாக அதிகரித்துவிட்டது. உதாரணமாக, 2010 ஆம் ஆண்டு 486 ரூபாய் என்றிருந்த 50 கிலோ டி.ஏ.பி. உரத்தின் விலை, 2012 ஆம் ஆண்டு 1,200 ரூபாயாகவும்; 50 கிலோ எம்.ஓ.பி. உரத்தின் விலை 231 ரூபாயிலிருந்து 840 ரூபாயாகவும்; 50 கிலோ காம்ப்ளக்ஸ் உரத்தின் விலை 374 ரூபாயிலிருந்து 1,110 ரூபாயாகவும் உயர்ந்துவிட்டது. இந்த தவறான உர மானியக் கொள்கைக்கேற்ப கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படுவதால், வெளிச் சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவது, மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை, வட்டிவீதக் கொள்கை ஆகியவை தான். மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளே விலைவாசி உயர்விற்கு வழி வகுக்கின்றன என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, குறிப்பாக தி.மு.க. உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில அரசைப் பொறுத்த வரையில், விலைவாசியை கட்டுப்படுத்தும் நோக்கில் பொருட்கள் கடத்தப்படுவதையும், பதுக்கப்படுவதையும் தடுத்து வருகிறது. இது மட்டுமல்லாமல், நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களான உளுந்தம் பருப்பு, துவரம் பருப்பு, பாமாயில், ரவை, மைதா, சர்க்கரை போன்ற பொருட்கள் குறைந்த விலையில் அளிக்கப்பட்டு வருகின்றன. விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, வெளிச் சந்தையில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தும் வகையில், விலை நிலைநிறுத்தல் நிதி, அதாவது, Price Stabilisation Fund ஒன்றினை ஏற்படுத்தி, சன்ன ரக அரிசி ஒரு கிலோ 25 ரூபாய்க்கும், மிக சன்ன ரக அரிசி ஒரு கிலோ 31 ரூபாய்க்கும் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இங்கே சில மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில், இடம் பெயர்ந்து இலங்கை முகாம்களில் வசிக்கும் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டும்; அவர்கள் சிங்களர்களுக்கு இணையாக அனைத்து உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. இந்த நிலை ஏற்படும் வரை இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும்; இலங்கையில் இனப் படுகொலையை நிகழ்த்தி போர்க் குற்றம் புரிந்தவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த, ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். இது தொடர்பாக, ஏற்கெனவே இந்த அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு அதைக் கண்டுகொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்தின் மீது, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

சென்ற ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு வலுவான தீர்மானத்தைக் கொண்டு வந்தது. இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக, மத்திய அரசு வாக்களிக்க வேண்டும் என்று நான் பாரதப் பிரதமரை தொடர்ந்து வலியுறுத்தினேன். முதலில், அதை ஆதரிப்பது பற்றி எதுவும் தெரிவிக்காத இந்திய அரசாங்கம், பின்னர் எனது தொடர் வலியுறுத்தல் காரணமாக அந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது. இருப்பினும், அந்தத் தீர்மானத்தின் வலுவை இழக்கச் செய்தவர் பாரதப் பிரதமர் அவர்கள். இது குறித்து பாரதப் பிரதமர் இலங்கை அதிபருக்கு எழுதிய கடிதத்தில், "... Your Excellency would be aware that we spared no effort and were successful in introducing an element of balance

in the language of the resolution.” என்று கூறி இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நீர்த்துப் போன தீர்மானம் மீதே இலங்கை அரசு இன்னமும் நடவடிக்கை எடுக்காத சூழ்நிலையில், மீண்டும் ஒரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவில் அமெரிக்க ஐக்கிய நாடு கொண்டு வர உள்ளது என்ற செய்தி வந்துள்ளது. இது போன்றதொரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில், அமெரிக்க ஐக்கிய நாடு கொண்டு வருவது ஒரு புறம் இருந்தாலும், தமிழர்கள் நலன் கருதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து அதை மற்ற நாடுகளுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும் மத்திய அரசை நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இதே போன்று, இலங்கைக் கடற்படையினரின் கொடூரச் செயல்களாலும், கொடும் தாக்குதல்களாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அப்பாவித் தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதில், மத்திய அரசு தொடர்ந்து அலட்சியப் போக்கினைக் காட்டி வருகிறது. இந்திய மீனவர்களின் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்துமாறும், அவர்களிடம் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுமாறும் இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையாக விளங்கும் காவேரி நதிநீர்ப் பிரச்சினை பற்றி எடுத்துரைத்தார்கள். இந்தப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலை நாட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுத்துள்ளேன்.

2012ஆம் ஆண்டு துவக்கத்தில், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜ சாகர் நீர்த்தேக்கங்களிலிருந்து கர்நாடகம் தனது கோடைப் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிட்டவுடன், இந்தச் செயல் தமிழகத்தின் குறுவைச் சாகுபடியை கடுமையாகப் பாதிக்கும் எனத் தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தில் 21.3.2012 அன்று எனது உத்தரவின் பேரில், தமிழக அரசால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கர்நாடக அரசின் இந்த நடவடிக்கை காரணமாக, தமிழகத்திற்கு வந்து சேர வேண்டிய தண்ணீரின் அளவு கணிசமாகக் குறையும் என்று சுட்டிக்காட்டி, காவேரி நதிநீர் ஆணையத்தை விரைந்து கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாரதப் பிரதமரைத் தொடர்ந்து வலியுறுத்தினேன்.

பாரதப் பிரதமர் வழக்கம் போல் மவுனம் சாதித்ததன் காரணமாக, காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தினைக் கூட்ட உத்தரவிடக் கோரி, தமிழகத்தின் சார்பில் 21.7.2012 அன்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதனையடுத்து, வேறு வழியின்றி கிட்டத்தட்ட 9 ஆண்டுகளுக்குப் பிறகு, 19.9.2012 அன்று காவேரி நதிநீர் ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டது. காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தினைக் கூட்டுவதற்கே மத்திய அரசு தயக்கம் காட்டுகின்ற நிலைமை தான் தற்போது நிலவுகிறது. இப்படிப்பட்ட ஒரு மத்திய அரசைத் தான் தமிழ்நாட்டைச் சேர்ந்த கட்சியான தி.மு.க. தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

9 ஆண்டுகளுக்குப் பிறகு கூட்டப்பட்ட காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில், இடர்ப்பாடுப் பங்கீட்டு முறையின்படி ஏற்பட்ட குறைபாட்டு நீரான 48 டி.எம்.சி. அடி தண்ணீரை, ஒரு நாளைக்கு 2 டி.எம்.சி. அடி தண்ணீர் வீதம் 24 நாட்களுக்கு திறந்துவிடவும்; அதன் பின்னர், காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி, சம்பா சாகுபடிக்குத்

தண்ணீரைத் தொடர்ந்து திறந்துவிடவும் கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு நான் வலியுறுத்தினேன். கர்நாடகத்தின் சார்பில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனது தொடர் வலியுறுத்தல் காரணமாக, 20.9.2012 முதல் 15.10.2012 வரை, நாள் ஒன்றிற்கு 9,000 கன அடி நீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று பாரதப் பிரதமர் உத்தரவிட்டார். ஆனால், கர்நாடகம் இதனை ஏற்க மறுத்துவிட்டது. இதனையடுத்து, ஒரு நாளைக்கு 2 டி.எம்.சி. அடி வீதம், 24 நாட்களுக்கு 48 டி.எம்.சி. அடி நீரினை திறந்துவிடுமாறு எனது உத்தரவின் பேரில் தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் 25.9.2012 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நதிநீர் ஆணையம் பிறப்பித்த உத்தரவினை செயல்படுத்துமாறு உத்தரவிட்டது. உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி 29.9.2012 அன்று தண்ணீரை விடுவித்த கர்நாடகம், 8.10.2012 அன்று தன்னிச்சையாக தண்ணீர் திறந்துவிடுவதை நிறுத்திவிட்டது. இதனை அடுத்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு 10.10.2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் விடுவிக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்ட மனுவினை விசாரித்த உச்ச நீதிமன்றம், தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டிய தண்ணீர் குறித்து முடிவெடுக்குமாறு, காவேரிக் கண்காணிப்புக் குழுவிற்கு அவ்வப்போது உத்தரவிட்டது. இதனையடுத்து, காவேரிக் கண்காணிப்புக் குழு கூட்டப்பட்டு தமிழகத்திற்கு அளிக்க வேண்டிய நீரின் அளவை அவ்வப்போது அறிவித்தது.

பின்னர், உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைப்படி, இது குறித்து பெங்களூர் சென்று, கர்நாடக முதலமைச்சருடன் 29.11.2012 அன்று நான் பேச்சுவார்த்தை நடத்தினேன். இந்தப் பேச்சுவார்த்தையின் போது, இடர்ப்பாடு பங்கீட்டு முறையின்படி மேட்டூர் அணைக்கு வந்து சேர வேண்டிய நீரில், 53.4 டி.எம்.சி. அடி தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது

என்று தெரிவித்து, சம்பா பயிரைக் காப்பாற்றும் வகையில், ஒரு நாளைக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 15 நாட்களுக்கு, 30 டி.எம்.சி. அடி தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட வேண்டும் என்றும், மீதமுள்ள 23.4 டி.எம்.சி. அடி தண்ணீரை 2012 டிசம்பர் மாத இறுதிக்குள் திறந்துவிட வேண்டுமென்றும் வலியுறுத்தினேன். ஆனால், கர்நாடக முதலமைச்சர் ஒரு சொட்டு நீர் கூட விட முடியாது என்று அறிவித்துவிட்டார். முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியோ, இங்கிருந்து கொண்டு ‘‘தமிழக முதலமைச்சர் என்ன கேட்டார்? அவர்கள் என்ன சொன்னார்கள்? மறுத்து விட்டார்களா? அல்லது இயலவில்லைஎன்றுசொன்னார்களா?’’என்றுவிதண்டாவாதம் செய்து கொண்டிருந்தார்.

கர்நாடக அரசு தண்ணீர் தர மறுத்ததையடுத்து, மீண்டும் உச்சநீதிமன்றத்திற்குஇந்தப்பிரச்சினைஎடுத்துச்செல்லப்பட்டு, 5.12.2012 முதல் 9.12.2012 வரையில், நாளொன்றுக்கு, 10,000 கன அடி தண்ணீர் திறந்துவிடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டால் தான், அதற்கு ஒரு சட்ட அங்கீகாரம் கிடைக்க வழிவகை ஏற்படும். அதன் பின்னர், இறுதி ஆணை தெரிவித்துள்ள காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு போன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம், காவேரியில் நமக்குள்ள உரிமையை நிலைநாட்ட இயலும். காவேரி நீர்ப் பிடிப்பு பகுதியில் போதிய மழை இல்லாவிட்டாலும், இடர்ப்பாட்டுக் காலப் பங்கீட்டு முறைப்படி, நமக்கு உரிய தண்ணீர் கிடைக்கப் பெறும். கர்நாடகம், தனது கோடைக்கால பாசனத்திற்கு, தனது நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்துவிட இயலாது. எனவே தான், காவேரி நடுவர்

மன்ற இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டதிலிருந்து, அதனை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

காவேரி நடுவர் மன்றம், தனது இடைக்கால ஆணையை 25.6.1991 அன்று வழங்கிய போது, அதனை ஏற்க கர்நாடக அரசு மறுத்தது. அப்போது நான், கடிதங்கள் வாயிலாக மத்திய அரசை வற்புறுத்தியதை அடுத்து, உச்ச நீதிமன்றக் கருத்தின் அடிப்படையில், கர்நாடக அரசு தாக்கல் செய்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த போதிலும், 10.12.1991 அன்று காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை எனது இடைவிடா முயற்சிகளால் மத்திய அரசு அதன் அரசிதழில் வெளியிட்டது.

இதே போன்று, காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை கர்நாடகம் மதித்து செயல்படுத்த ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என்று 14.5.1992 அன்று உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது நடைபெற்ற வாதத்தில் இடைக்கால ஆணையை செயல்படுத்த ஒரு திட்டம் செயல்படுத்தப்படும் என்று மத்திய அரசால் உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தான், காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரிக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டன.

காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டதற்கும், காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரிக் கண்காணிப்புக் குழு ஆகியவை அமைக்கப்பட்டதற்கும் எனது தலைமையிலான அப்போதைய தமிழக அரசின் பகீரத முயற்சிகளும், நடவடிக்கைகளும் தான் காரணம் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

2007ஆம் ஆண்டு காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளிவந்த போது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு தான் தமிழகத்தில் ஆட்சி புரிந்து வந்தது. மத்தியிலும், தி.மு.க. அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கூட்டணி அரசு தான் ஆட்சியில் இருந்தது. ஆனால், காவேரியிலிருந்து தண்ணீரைப் பெறுவதற்கோ அல்லது காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடுவதற்கோ எவ்வித நடவடிக்கையையும் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி எடுக்கவில்லை.

நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், இது குறித்து பாரதப் பிரதமரிடம் கோரிக்கை வைத்தேன். பின்னர், தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டது. காவேரி நதிநீர்ப் பிரச்சினையை விசாரித்து வரும் உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடாதது குறித்து கேள்வி எழுப்பியது. காவேரி கண்காணிப்புக் குழுவும் மத்திய அரசிதழில் வெளியிட பரிந்துரை செய்தது. மத்திய சட்ட அமைச்சகமும் ஒப்புதல் அளித்துள்ளதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளி வந்தது. இருப்பினும், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்படவில்லை.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட கேட்டுக் கொள்ள, 17.12.2012 அன்று பாரதப் பிரதமரை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனது அறிவுரையின் பேரில் சந்தித்ததாக தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியே தெரிவித்து இருந்தார். ஆனால், இவர்கள் பிரதமரை சந்தித்து என்ன சொன்னார்கள் என்பது தெரியவில்லை. எழுத்துபூர்வமாகவும், எதையும் தெரிவித்ததாகத் தெரியவில்லை. எந்த விதக் கடிதமும் இது குறித்து தி.மு.க. தரப்பிலிருந்து பாரதப் பிரதமருக்கு

எழுதப்பட்டதாகவும் தெரியவில்லை. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, தாமதத்திற்குக் காரணமே தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாரதப் பிரதமருடனான சந்திப்பு தானோ என்ற ஐயம் அனைவர் மத்தியிலும் எழுந்தது.

இந்தச் சூழ்நிலையில், 4.2.2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் காவேரிநதிநீர்ப்பிரச்சினைதொடர்பானவழக்குவிசாரணைக்கு வந்த போது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை 20.2.2013–க்குள் மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 5.2.2007 அன்று வழங்கப்பட்ட இறுதி ஆணை சரியாக 6 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளியிடப்பட உள்ளது. இது எனது தலைமையிலான அரசின் தொடர் வலியுறுத்தலுக்கும், தீவிர, இடைவிடாத, அயராத முயற்சிக்கும் கிடைத்த வெற்றி ஆகும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

காவேரி நதிநீர்ப் பிரச்சினையில், மிகப் பெரிய போராட்டங்களுக்குப் பிறகு ஜனவரி 2013 வரையில், 63 டி.எம்.சி. அடி அளவுக்குத் தண்ணீர் பில்லிகுண்டுலு நீரளவு நிலையத்திலிருந்து தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது.

காவேரி நதிநீர்ப் பிரச்சினை குறித்த வழக்கு 4.2.2013 அன்று உச்ச நீதிமன்றம் முன்பு விசாரணைக்கு வந்தபோது, சம்பந்தப்பட்ட டெல்டா மாவட்டங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும் வகையில் ஒரு வல்லுநர் குழுவை அமைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் மத்திய நீர் ஆணையத்திற்கு உத்தரவிட்டது. மேலும், 2 டி.எம்.சி. அடி தண்ணீரை சம்பா பாசனத்திற்காக மேட்டூரிலிருந்து தமிழகம் விடுவிக்கவேண்டும்என்றும்,இதனைகர்நாடகம்தமிழகத்திற்கு ஈடுசெய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்ற உத்தரவிற்கிணங்க, 5.2.2013 அன்று ஆய்வினை மேற்கொண்ட

வல்லுநர் குழு, தனது அறிக்கையினை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. இந்த வழக்கு 7.2.2013 அன்று விசாரணைக்கு வந்தபோது, வல்லுநர் குழுவின் பரிந்துரைக்கேற்ப, 2.44 டி.எம்.சி. அடி தண்ணீர் மேட்டூர் அணையை வந்தடையும் வகையில் கர்நாடகம் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன் மூலம் 1 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்கள் காப்பாற்றப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், நமக்குத் தர வேண்டிய தண்ணீரை முறைப்படி கர்நாடகம் விடுவிக்காததாலும்; தமிழகத்தில், பருவமழை பொய்த்துவிட்டதாலும்; வேளாண் உற்பத்தியில், நாம் நினைத்த அளவுக்கு, சாதனையை எய்த முடியவில்லை.

2011–2012 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி முன் எப்போது இல்லாத அளவாக 101.51 இலட்சம் மெட்ரிக் டன் என்ற இலக்கை எய்தி சாதனை படைத்தது. இதற்காக, மத்திய அரசின் விருதும் நமக்குக் கிடைத்துள்ளது. நிச்சயமாக வரும் ஆண்டு, இயற்கையின் கருணையோடு உணவு தானிய உற்பத்தியில் மீண்டும் ஒரு சாதனையை தமிழகம் நிச்சயம் படைக்கும்.

காவேரி நடுவர் மன்ற ஆணைகளின்படி தமிழகத்திற்குரிய நீரினை கர்நாடகம் விடுவிக்காததைக் கருத்தில் கொண்டும், கர்நாடக அரசு உரிய நீரைத் தமிழகத்திற்கு வழங்கவில்லை என காவேரி கண்காணிப்புக் குழு பதிவு செய்துள்ளதன் அடிப்படையிலும், தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டினை கர்நாடகம் ஈடுசெய்யும் வகையில் தமிழக அரசின் சார்பில் ஒரு சிவில் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானதுதான் என்று அறிக்கை

சமர்ப்பித்துள்ளதால், தமிழகத்திற்கு சாதகமான தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கும் என்று நான் நம்புகிறேன். எனவே, இந்தப் பிரச்சினையிலும் தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், நமக்குரிய தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிட மறுத்ததன் காரணமாகவும், பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும் பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் விரைவில் அறிவிக்கப்படும் என ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி, இதனை விரைந்து வழங்கிட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

காவேரிப் பாசன பகுதியில் 12 மணி நேர, தடையில்லா மும்முனை மின்சாரம்; சம்பாப் பயிர்களுக்காக 107 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் அறிவிக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள்; மற்றும் தொடர் சட்டப் போராட்டங்களின் மூலம் கர்நாடகத்திலிருந்து பெறப்பட்ட காவேரி நீர் ஆகியவை சம்பா நெற் பயிர்களை ஓரளவு காத்திட உதவி புரிந்தன.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணத்தை அரசே ஏற்கும் என்று நான் ஏற்கெனவே தெரிவித்ததற்கு இணங்க, டெல்டா பகுதிகளில் உள்ள 5 இலட்சத்து 45 ஆயிரம் விவசாயிகளுக்கான 27 கோடியே 67 இலட்சம் ரூபாய் பயிர்க் காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்தியுள்ளது. பயிரிழப்பை அளவிட்டு, விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய நிவாரணம் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் நான் பின் வருவனவற்றை இந்த மாமன்றத்திற்கு அறிவிக்கின்றேன்.

1) மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைபடி, நெற்பயிரை இழந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, 2,429 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். மாநிலப் பேரிடர் நிவாரண வரையறைபடி, ஏக்கர் ஒன்றுக்கு, 4,000 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், இந்த 4,000 ரூபாய் நிவாரணத் தொகை, 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். இதுவன்றி, பயிர் இழப்புக்காக காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு, 8,692 ரூபாய் வரை பெற இயலும் என்றும் தெரிவித்து இருந்தேன். இங்கே பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளபடி, காப்பீட்டு நிறுவனம், Firka அடிப்படையில், 5 கிராமங்களைத் தெரிந்தெடுத்து, ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு அறுவடை சோதனைகளை மேற்கொண்டு, அந்த சோதனை முடிவுகளின் அடிப்படையிலும்; கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற சராசரி விளைச்சலின் அடிப்படையிலும்; காப்பீட்டு நிவாரணத் தொகையை நிர்ணயிக்கும். இவ்வாறு, காப்பீட்டு நிவாரணத் தொகையை நிர்ணயம் செய்யும் போது 100 விழுக்காடு மகசூல் இழப்பு ஏற்பட்டால்தான், ஒரு ஏக்கருக்கு முழுக் காப்பீட்டுத் தொகையான 8,692 ரூபாய் கிடைக்கும். 50 விழுக்காடு மகசூல் இழப்பு ஏற்பட்டால், ஒரு ஏக்கருக்கு சுமார் 4,350 ரூபாய் தான் காப்பீட்டு நிவாரணத் தொகையாக கிடைக்கும். மேலும், சோதனை அறுவடை செய்து முடிக்கப்பட்டு, காப்பீட்டு நிவாரணத் தொகை பெறுவதற்கு தாமதம் ஏற்படும். இதனைத் தவிர்க்கும் வகையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு முழுக் காப்பீட்டு நிவாரணத் தொகையை முன் கூட்டியே தமிழக அரசு வழங்கும். இதன்படி, 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல்

பாதித்துள்ள 1 இலட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளின் 3.61 இலட்சம் ஏக்கர் பயிர்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, 15,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். அதாவது, பேரிடர் நிவாரணம், வேளாண் பயிர்க் காப்பீடு, மற்றும் சிறப்புக் கூடுதல் நிவாரணம் என மொத்தமாக, ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய் உடனடியாக விவசாயிகளுக்கு எனது தலைமையிலான அரசால் வழங்கப்படும். இதனால், அரசுக்கு 541 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2) காவேரி டெல்டா விவசாயிகள் அனைவருக்கும் தமிழக அரசே பயிர்க் காப்பீட்டுத் தொகையை செலுத்தியுள்ளதால், 50 விழுக்காட்டிற்கும் குறைவாக பயிரிழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கும், அந்தந்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள சராசரி பயிரிழப்புக்கு ஏற்ப, காப்பீட்டு நிவாரணம் வழங்கப்படும். காப்பீட்டு நிறுவனத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன், இந்த நிவாரணம் வழங்கப்படும்.

3) தேசிய ஊரக, வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்படும்.

4) தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக, 181 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15,000 பண்ணைக் குட்டைகள் டெல்டா மாவட்டங்களில் அமைக்கப்படும்.

5) இதர வேலைவாய்ப்புப் பணிகள், 1,336 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். மொத்தத்தில், காவேரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், இந்தப் பணிகள் மூலம் 1,517 கோடி ரூபாய் அளவுக்கு ஊதியம் பெறுவர்.

6) வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், கால்நடைப் பராமரிப்பு,

பால் வளம் மற்றும் மீனளத் துறை வாயிலாக 5 கோடி ரூபாய்க்குப் பசுந்தீவனம்; 15 கோடி ரூபாய்க்கு அடர் தீவனம்; 15 கோடி ரூபாய்க்கு உலர் தீவனம் மற்றும் 12 கோடியே 35 இலட்சம் ரூபாய்க்குப் பண்ணைக் குட்டைகளில் உள்நாட்டு மீன் வளர்ப்பு என 47 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

7) வறட்சி காரணமாக டெல்டா பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் 7 கோடியே 2 இலட்சம் ரூபாய்க்கு நீர் ஆதாரங்கள் மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துதல்; 18 கோடியே 3 இலட்சம் ரூபாய்க்கு பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதல்; மற்றும் 12 கோடியே 20 இலட்சம் ரூபாய்க்கு நகராட்சிகளில் குடிநீர் வழங்கல் என 37 கோடியே 25 இலட்சம் ரூபாய், மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

8) தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரண உதவிகள் மூலம், தமிழக அரசுக்கு 2,143 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

9) இதுவன்றி, பொதுப் பணித் துறை மூலம் ஏரிகள் தூர் வாருதல்; குளங்கள் சீரமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

10) தமிழ்நாட்டின் ஏனையப் பகுதிகளிலும் மழை குறைவாக பெய்துள்ளதால், சென்னை நீங்கலாக ஏனைய 31 மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்படும்.

11) இதனையடுத்து, அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் செலுத்த வேண்டிய நில வரி தள்ளுபடி செய்யப்படும்.

12) வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனை திரும்பச் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிரமத்தினைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவுக் கடன்கள் மாற்றி அமைக்கப்படும். அதாவது, reschedule செய்யப்படும்.

13) டெல்டா மாவட்டங்கள் நீங்கலாக, பிற மாவட்டங்களில் உள்ள 3 இலட்சத்து 34 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு அளிக்கப்படும். 100 நாட்கள் பணி வரம்பு என்பது, 150 நாட்களாக உயர்த்தப்படும்.

14) மாநிலம் முழுவதற்குமான வறட்சி கோரிக்கை மனு, அதாவது Drought Memorandum தயார் செய்யப்பட்டு, நிவாரணம் கோரி மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

15) விவசாயிகள் இறப்பு பற்றி இந்த அவையில் பல உறுப்பினர்கள் பேசி உள்ளனர்.

9 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இருந்தாலும் அதற்குப் பயிரிழப்பு காரணமில்லை. இருப்பினும், பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொண்டுள்ள விவசாயிகளின் உயிரிழப்பினால் துயரம் அடைந்துள்ள அவர்தம் குடும்பத்தினரின் வறிய நிலையைக் கருத்தில் கொண்டு, இந்த 9 குடும்பத்தினருக்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

மேற்கண்ட அறிவிப்புகள் விவசாயிகள் துயர் துடைக்க வழிவகை செய்யும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்த பதிலுரையின் மூலம் மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது தங்களது மேலான கருத்துகளை வழங்கிய

மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் போதுமான விளக்கங்கள் கிடைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

எனது அரசின் செயல்பாடுகள் குறித்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டிய குறைபாடுகளின் தன்மைகளைக் கண்டறிந்து; அவற்றில் உண்மை இருப்பின், உரிய நடவடிக்கைகளை எனது அரசு எடுத்திடும் என்ற உறுதியினை நான் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்க வேண்டும்; அண்டை மாநிலங்கள் உடனான நதிநீர்ப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட வேண்டும்; தமிழகத்தை மின் மிகை மாநிலமாக்க வேண்டும் போன்ற உயரிய இலட்சியங்களை அடையும் வண்ணம் அயராது பாடுபட்டு வரும் இந்த மக்கள் நல அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்கு நான் அளித்த விளக்கங்களை, பதிலுரையை ஏற்றுக் கொண்டு, திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அனைவரையும் கேட்டுக் கொண்டு இத்துடன் எனது உரையை நிறைவு செய்து அமைகிறேன்.

வணக்கம்.

❖ ❖ ❖

“எங்களது அரசின் வியத்தகு சாதனைகளையும், நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகளையும், மேற்கொள்ள விருக்கும் மக்கள் நலப் பணிகளையும் கோடிட்டுக் காட்டும் விதமாக இந்த ஆளுநர் உரை அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.”

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

